<u>பத்திரிக்கை செய்தி</u>

கடலூர் மாவட்டம், கிள்ளை காவல்நிலையத்தில் 2013 ஆம் ஆண்டு சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.S.உதயகுமார் (வயது 63) என்பவர், கடலூர் மாவட்டம், புதுச்சேரி மாநிலம், காரைக்கால், நெ.46, வள்ளல் சீதக்காதி வீதியைச் சேர்ந்த யாகோப் மகன் ஹமீது மரிக்கார் (வயது 54) என்பவரிடம் சாலை விபத்து ஏற்படுத்திய வாகனத்தை காவல் நிலையத்திலிருந்து விடுவிக்க ரூ.2500/- லஞ்சம் கேட்டுள்ளார். இது தொடர்பாக ஹமீது மரிக்கார் என்பவர் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுத்ததன் பேரில், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.S.உதயகுமார் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து, கடந்த 27.02.2013 அன்று திரு.S.உதயகுமார் என்பவர் ரூ.2500/- லஞ்சம் பெற்ற போது கைது செய்யப்பட்டார். வழக்கின் விசாரணை மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இன்று 01.03.2025 ஆம் தேதி அவ்வழக்கின் விசாரணை முடிவில் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்கள் லஞ்சம் வாங்கிய கிள்ளை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. S.உதயகுமார் என்பவரை குற்றவாளி என தீர்ப்பளித்து, அவருக்கு ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவு 7 க்கு இரண்டு வருடங்கள் மெய்க்காவல் தண்டனையும், ரூ.5,000/- அபராதமும் மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவு 13(2) r/w 13(1)(d) க்கு இரண்டு வருடங்கள் மெய்க்காவல் தண்டனையும், ரூ.5,000/- அபராதமும் தண்டனை விதிக்கப்பட்டது. மேற்படி சிறை தண்டனை ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டும் என்றும், மேலும் அபராத தொகை கட்டத்தவறினால் கூடுதலாக 6 மாதம் காலம் மெய்காவல் சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.